பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

19 06 2024 **WEDNESDAY** **7.15 PM**

தலைப்புச் செய்திகள்

1. அரிவாள் செல் இரத்தசோகை நோயை முழுமையாக ஒழிப்பதில் மத்திய அரசு உறுதி கொண்டிருப்பதாக குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர் கூறியுள்ளார்.

2. மத்திய அரசு மருத்துவமனைகளில் கோடை வெயிலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்க தனிப்பிரிவை ஏற்படுத்துமாறு அதிகாரிகளுக்கு மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா உத்தரவிட்டுள்ளார்.

3. விவசாயிகளின் வருவாயை அதிகரிப்பதில் உணவு பதப்படுத்துதல்துறை முக்கிய பங்காற்றும் என்று அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு சிராக் பஸ்வான் தெரிவித்துள்ளார்.

4. பங்களாதேஷில் இன்று ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி ஒன்பது பேர் உயிரிழந்தனர்.

5. தென்னப்பிரிக்காவுக்கு எதிரான இரண்டாவது மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் 326 ரன் என்ற இலக்கை இந்தியா நிர்ணயித்துள்ளது.

--- இனி விரிவான செய்திகள்--

<<<<<<>>>>>

உலக அரிவாள் செல் இரத்தசோகை நோய் விழிப்புணர்வு தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

மத்தியப்பிரதேச மாநிலம் **Dindori** –ல் இதையொட்டி, நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர் பங்கேற்று பேசினார்.

அரிவாள் செல் இரத்த சோகை நோயை முழுமையாக ஒழிப்பதில் மத்திய அரசு உறுதி கொண்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

அதனை செயல்படுத்தும் நோக்கில், ஆயுஷ்மான் அட்டையில் அரிவாள் செல் நோய்க்கான சிகிச்சையும் சேர்க்கப்பட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த நோய் குறித்து பரப்பப்படும் தவறான தகவல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

மேலும், பழங்குடியின சமூகம் நாட்டின் அடையாளமாக திகழ்கிறது என்றும், நாட்டின் பொருளாதாரத்தில் அந்த சமூகம் மிகப்பெரிய பங்களிப்பினை வழங்கி வருகிறது என்றும் திரு ஜெக்தீப் தங்கர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

அரிவாள் செல் ரத்தசோகை நோயை ஒழிப்பதில் கிராம பஞ்சாயத்து மற்றும் அங்கன்வாடி நிலையிலான நோய் கண்காணிப்பு நடவடிக்கைகள் அவசியம் என்று மத்திய பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திரு **Jual Oram** தெரிவித்தார்.

புதுதில்லி எயிம்ஸ் மருத்துவமனையில் இன்று நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் பங்கேற்று பேசிய அவர், இந்த நோயை ஒழிப்பதில் அனைத்து துறைகளும் கூட்டாக சேர்ந்து செயல்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

அரிவாள் செல் நோய் பழங்குடியினரை மட்டுமே பாதிக்கும் என்ற தவறான தகவல் பரப்பப்பட்டு வருவதாகவும், அது உண்மையல்ல என்றும் திரு **Jual Oram** தெரிவித்தார்.

**<<<<<<>>>>>**

வெப்ப அலையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிறந்த சிகிச்சை அளிக்கப்படுவதை சுகாதாரத்துறை அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும் என்று மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா அறிவுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் உள்ள மருத்துவமனைகளில் இன்று ஆய்வு மேற்கொண்ட அவர், வெப்ப அலையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சைகள் குறித்தும், அது தொடர்பான ஏற்பாடுகள் குறித்தும் மருத்துவர்களிடம் கேட்டறிந்தார்.

மத்திய அரசு மருத்துவமனைகளில் வெப்பவாதத்திற்கான தனி சிகிச்சை பிரிவை அமைக்குமாறு அதிகாரிகளுக்கு திரு ஜெ பி நட்டா உத்தரவிட்டார்.

வடமாநிலங்களில் வெப்ப அலையின் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில், அதனை எதிர்கொள்வது குறித்து தீவிர ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையே, புதுதில்லி ராம்மனோகர் லோஹியா மருத்துவமனை மற்றும் **‘Safdarjung ’** மருத்துவமனையில் வெப்பவாதம் தொடர்பான பாதிப்புகளால் 18 பேர் உயிரிழந்துள்ளனர்.

அந்த மருத்துவமனைகளில் வெப்பவாதத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தொடர்ந்து சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

தற்போது 20-க்கும் மேற்பட்டோருக்கு வெப்பவாதம் தொடர்பான சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருவதாக அந்த மருத்துவமனை தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>

விவசாயிகளின் வருவாயை அதிகரிப்பதில் உணவு பதப்படுத்துதல்துறை முக்கிய பங்காற்றும் என்று மத்திய உணவு பதப்படுத்துதல் தொழில்துறை அமைச்சர் திரு சிராக் பஸ்வான் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று உலக உணவு இந்தியா மாநாட்டுக்கான முன்னோட்ட நிகழ்ச்சியில் அவர் பங்கேற்று பேசினார்.

உணவுபதப்படுத்துதல் துறையில் ஏராளமானோருக்கு வேலைவாய்ப்புகள் உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் உணவு பதப்படுத்துதல் கட்டமைப்பை அமைப்பதன் மூலமாக உள்ளூர் தயாரிப்புகளை பதப்படுத்தும் பணி அதிகரிக்கும் என்று அவர் தெரிவித்தார்.

அடுத்த ஐந்தாண்டுகளில் காய்கறிகள், பழங்களின் கழிவை குறைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று அவர் கூறினார்.

உலகளாவிய தர நிலையை இந்திய தயாரிப்புகள் எதிர்கொள்ளும் விதமாக சுகாதாரம், தர கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்று திரு சிராக் பஸ்வான் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் பங்கேற்று பேசிய மத்திய இணையமைச்சர் திரு **Ravneet Singh Bittu,** கடந்த பத்தாண்டுகளில் நாட்டில் பதப்படுத்தப்பட்ட உணவு ஏற்றுமதி வெகுவாக அதிகரித்திருப்பதாக கூறினார்.

<<<<<<>>>>>

பட்ஜெட்டுக்கு முந்தைய கலந்தாலோசனையின் ஒரு பகுதியாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் இன்று புதுதில்லியில் பொருளாதார நிபுணர்களுடன் ஆலோசனை மேற்கொண்டார்.

நிதித்துறை இணையமைச்சர் திரு பங்கஜ் சௌத்ரி மற்றும் உயரதிகாரிகள் இக்கூட்டத்தில் பங்கேற்றனர்.

<<<<<<>>>>>

மதுபானக்கொள்கை முறைகேடு வழக்கு தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள தில்லி முதலமைச்சர் திரு அரவிந்த் கெஜ்ரிவாலின் நீதிமன்ற காவலை அடுத்த மாதம் மூன்றாம் தேதிவரை நீட்டித்து தில்லி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

திஹார் சிறையில் இன்று அவர் காணொளி வாயிலாக நீதிமன்றத்தின்முன் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில், இந்த உத்தரவை நீதிமன்றம் பிறப்பித்துள்ளது.

<<<<<<>>>>>

இலங்கை கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களை உடனடியாக விடுவிக்க தேவையான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும் என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக வெளியுறவு அமைச்சர் திரு ஜெய்சங்கருக்கு இன்று எழுதியுள்ள கடிதத்தில் அவர் இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

புதுக்கோட்டை மாவட்டத்தை சேர்ந்த நான்கு மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் நேற்று சிறைபிடிக்கப்பட்டதை அக்கடிதத்தில் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை அரசின் கட்டுப்பாட்டில் தற்போது 15 மீனவர்களும், 162 மீன்பிடி படகுகள் உள்ளதாகவும் திரு மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

பங்களாதேஷில் இன்று ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி ஒன்பது பேர் உயிரிழந்தனர்.

அங்குள்ள **Cox's Bazar -**ல் நேற்றுமுதல் தொடர்ந்து கனமழை பெய்துவரும் நிலையில், ரோஹிங்கியா அகதிகள் தங்கியிருக்கும் பகுதியில் இன்று காலை நிலச்சரிவு ஏற்பட்டது.

அந்நாட்டை சேர்ந்த தீயணைப்புத்துறையினர் மற்றும் பேரிடர் மீட்புப்படையினர் நிலச்சரிவில் சிக்கியவர்களை மீட்கும் பணியில் தொடர்ந்து ஈடுபட்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

மலைப்பகுதியையொட்டியுள்ள இந்த முகாம்களில், ஆயிரக்கணக்கான ரோஹிங்கியா அகதிகள் தங்கியிருப்பதாக கூறப்படுகிறது.

<<<<<<>>>>>

மெக்காவுக்கு ஹஜ் பயணம் மேற்கொண்டவர்களில் 550 பேர் கடுமையான வெப்ப அலையின் தாக்கத்தினால் உயிரிழந்திருப்பதாக செய்தி நிறுவனங்கள் தெரிவிக்கின்றன

மெக்காவில் தொடர்ச்சியாக, 50 டிகிரி செல்சியஸ்ஸூக்கும் மேலான வெப்பநிலை நிலவிவரும் நிலையில்,

எகிப்து நாட்டை சேர்ந்த 320 பயணிகள் வெப்பவாதம் தொடர்பான பாதிப்புகளால் உயிரிழந்திருப்பதாகவும், ஜோர்டான் நாட்டை சேர்ந்த 60 பேர் உயிரிழந்திருப்பதாகவும் கூறியுள்ளன.

வெப்ப அலையின் தாக்கத்தை எதிர்கொள்வதற்கான நடவடிக்கைகள் அங்கு மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும், அதையும் மீறி கடுமையான வெப்பத்தின் காரணமாக இப்பாதிப்புகள் ஏற்பட்டிருப்பதாகவும் அங்குள்ள செய்தி நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.

<<<<<<>>>>>

ரஷ்யா – வடகொரியா இடையே ராணுவ நடவடிக்கைகளை பலப்படுத்துவதற்கான ஒப்பந்தம் **Pyongyang**-ல் இன்று கையெழுத்தானது.

இதனையடுத்து, செய்தியாளர்களை சந்தித்த வடகொரிய அதிபர் கிம் ஜாங் உன், ராணுவ நடவடிக்கைகளை பரஸ்பரம் பகிர்ந்துகொள்ள இந்த ஒப்பந்தம் வழிவகுக்கும் என்று தெரிவித்தார்.

ரஷ்யா அதிபர் திரு விளாடிமீர் புட்டின், கடந்த 24 ஆண்டு காலத்தில் முதல் முறையாக வடகொரியா சென்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

<<<<<<>>>>>

உத்தரப்பிரதேச மாநிலத்தில் இன்று முதல் 23-ஆம் தேதிவரை வெப்ப அலையின் தாக்கம் தீவிரமாக இருக்கும் என்றும், அதன்பின் படிப்படியாக வெப்பநிலை குறையும் என்றும் வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

அந்த மையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இமாச்சலப்பிரதேசம், தெற்கு உத்தராகண்ட், பஞ்சாப், பீகார், ஜார்கண்ட், ஒடிஷா மற்றும் ஜம்முவில் உள்ள சில பகுதிகளில் வரும் 23-ஆம் தேதிவரை வெப்ப அலையின் தாக்கம் நீடிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், வடமாநிலங்களின் சில பகுதிகளில் மேற்கிலிருந்து வீசும் காற்று காரணமாக, நாளையும், நாளை மறுநாளும் வெப்ப அலையின் தாக்கம் குறையும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

வடகிழக்கு மாநிலங்கள் மற்றும் மேற்குவங்கத்தின் இமயமலையை ஒட்டியுள்ள சில பகுதிகளில் அடுத்த ஐந்து நாட்களுக்கு கனமழை முதல், அதிகனமழை வரை பெய்யக்கூடும் என்றும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

தமிழகம், புதுச்சேரி, காரைக்கால், தெலங்கானா, ராயலசீமா, யானாம் மற்றும் கடற்கரையோர ஆந்திரப்பிரதேசத்தின் சில பகுதிகளில் அடுத்த ஐந்து நாட்களுக்கு லேசானது முதல் மிதமானது வரையிலான மழை பெய்யக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் 326 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு பேட் செய்துவரும் தென்னாப்பிரிக்கா சற்றுமுன்வரை 32 புள்ளி நான்கு ஓவரில், 3 விக்கெட் இழப்பிற்கு 162 ரன் எடுத்துள்ளது.

பெங்களூருவில் நடைபெற்றுவரும் இப்போட்டிடயில் டாஸ் வென்ற தென்னாப்பரிக்கா முதலில் பந்துவீச தீர்மானித்தது.

இதையடுத்து பேட் செய்த இந்தியா நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 3 விக்கெட் இழப்பிற்கு 325 ரன் எடுத்தது.

அதிகபட்சமாக ஸ்மிருதி மந்தனா 136 ரன் எடுத்தார்.

-----------

ஹர்மன்பிரீத் கவுர் அதிரடியாக ஆடி 88 பந்துகளில், 103 ரன் குவித்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

----------------------

உலகக்கோப்பை வில்வித்தை போட்டியின் மகளிர் பிரிவில் இந்தியா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது

துருக்கியின் **Antalya**–வில் நடைபெற்றுவரும் இப்போட்டியின், மகளிர் குழு பிரிவில் இந்தியா 234-227 என்ற புள்ளிக்கணக்கில் சீனாவை வென்றது.

--------------

**Armenia** –வில் நடைபெற்ற சர்வதேச செஸ் போட்டியில் இந்தியாவின் **Arjun Erigaisi** பட்டம் வென்றார்.

----------------

டென்னிஸ் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசை பட்டியலில் இந்தியாவின் சுமித் நாகல் ஏழாவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

<<<<<<END>>>>>